DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| STC.NO. | Crime No.: | Station : |
| PW : | C.MP. | DVC : 4/2016 |

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பழனியம்மாள் | Caste | |
| Father's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | 06.01.2023 | | |

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் கணவர் என்னை அடித்தாக 6.1.20216 ல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு நான் 1 ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு நான் சென்றேன் என்றால் செல்லவில்லை, தற்போது வரை செல்லவில்லை.அதன் பிறகு அவருடன் நான் சேர்ந்து வாழவில்லையென்றால் சரிதான். நான் மாவட்ட சமூக நலம் அலுவலகத்தில் என் கணவர் என்னை அடித்ததாக நான் மனு கொடுதிருந்த நிலையில் அதனுடன் தாக்கல் செய்திருந்த மருத்துவ ஆவணங்கள் என்னென்ன என்றால் அறுவை சிகிச்சை செய்ததற்காக ஆவணங்கள் தாக்கல் செய்திருந்தேன். எனக்கு என்ன அறுவை சிகிச்சை செய்யப்பட்டதுத என்றால் கற்பபை அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. நான் தாக்கல் செய்திருந்த ஆவணங்களில் அறுவை சிகிச்சை செய்ததற்கான ஆவணங்கள் எதேம் தாக்கல் செய்யவில்லையென்றால் இல்லை, நான் தாக்கல் செய்து இருந்தேன். நான் வழக்கிற்காக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகள் போலியாக என்னால் தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல, நான் உண்மையாக தான் கொடுத்தேன். அதனால் தான் நான் அறுவை சிகிச்சைக்காக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. என் மகள் என் குடும்பத்தில் முதல் பட்டதாரி என்றால் சரிதான். அவருக்கு கல்வி ஊக்க தொகையாக வருடத்திற்கு ரூபாய் இருபது ஆயிரம் வாங்கி வந்தாரா

என்றால் இல்லை, என் மகள் பள்ளியில் படிக்கும் போது ஊக்க தொகையாக 2000 கொடுத்தார்கள். கல்லூரியில் படிக்கும் போது கொடுக்கவில்லை. கல்லூரியில் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவர் சவர தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான் அதனுடன் டெக்கரேசன் வேலையும் செய்து வருகிறார். நான் வந்த பிறகு டெக்கரேசன் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். என் கணவர் டெக்கரேசன் வேலை செய்து வருவதை பற்றி பிரமான பத்திரிக்கையில் சொல்லவில்லைஎன்றால் நான் வந்த பிறகு அந்த வேலையை செய்ய ஆரம்பித்தார். நான் தாக்கல் செய்துள்ள பிரமான பத்திரிக்கையில் பக்கம் மூன்று பத்தி 6ல் என் கணவர் நான் ஒரு நபருடன் தகாத உறவு வைத்திருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அவரின் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. அவர் என்னுடைய கணவரின் அத்தை மகன் என்றால் சரிதான். அவருடைய பெயர் குமார் என்றால் சரிதான், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நபரின் பெயரையும் என் கணவர் சொல்வார். நான் தற்போது வரை குமார் என்பவருடன் தொடர்பில் உள்ளேனா என்றால் இல்லை. நான் அன்பு பழமுதிர் நிலையத்தில் வேலையில் இருந்தேன் என்றால் சரிதான். அங்கு வேலையீருந்த போது வடிவேல் என்பவருடன் தொடர்பு இருந்தேன் என்றால் இல்லை. அன்பு பழமுதிர் நிலையத்திற்கு எதிராக இருந்த துரித உணவகத்தில் இருந்த ஒரு நபருடன் தவராக இருந்தேனா என்றால் இல்லை. நான் திருமணத்திற்கு எவ்வளவு செலவு செய்தேன் என்றால் ரூபார் ஒரு லட்சம், நகை ஏழு எட்டு சவரன் போட்டார்கள். கல்யாணம் ஒரு கவுண்டர் வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான், திருமணத்திற்கு 100 நபர்கள் என்றால் சுமார் 500 நபர்கள் வந்து இருந்தார்கள். திருமணத்திற்கான செலவு பற்றிய விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் இல்லை, அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு திருமணத்தின் போது எத்ததை சவரன் போட்டார்கள் என்றால் பத்து சவரன் போட்டார்கள் பத்து சவரனில் என்னென் போட்டார்கள் என்று சொல்லவில்லையென்றால் சரிதான். எனக்கு குண்டு ஊசி அளவு தங்கள் போடவில்லையென்றும்அப்படி போட்டிருந்தால் எனக்கு போடப்பட்ட நகைகளை குறித்து என் மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கியில் இரண்டு தங்க நாணயங்கள் வைத்துள்ளேன் அது என் அண்ணன் உடையது. அந்த இரண்டு தங்க நாணயங்கள் சத்தியமங்கலத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இரண்டும் என் கணவரின் நகை. அதை கோபி தாமு செட்டியார் கடையில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமான

பத்திரிக்கையில் என் கணவருக்கும் எனக்கும் ஏற்பட்ட பிரச்சனைகள் பற்றி தேதி, மாதம், வருடம் குறிப்பிட்டு சொல்லாததிருந்த நிலையில் என்னுடைய மனுவே பொய்யானது என்றால் சரியல்ல. நான் என் கணவரை விட்டு எந்த காரணமும் இல்லாமல் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தையல் கடையில் மாதம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதித்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் ஜீவனாம்சம் கொடுத்து தான் நான் வாழ வேண்டுமென்ற அவசியம் இல்லையென்றால் சரியல்ல. என் கணவர் என்னை வீட்டை விட்டு அடித்து துரத்திவிட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் கணவரை தவிர்த்து வேறு நபருகளுடன் தகாத உறவில் இருப்பதால் அவரை விட்டு பிரிந்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னை நான் பராமரித்து கொள்ள வசதி இருப்பதால் நான் இந்த மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது இல்லையென்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. என் கணவர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ உள்ளார் என்றால் என்னால் சேர்ந்து வாழ முடியாது. ( சாட்சி அழுது கொண்டே சாட்சியம் அளித்தார்) நான் விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.